மானியக் கோரிக்கை எண்.36

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

> **‘‘தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும், சமூக பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெற வேண்டும்’’**
>
> **– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
> **புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

கொள்கை விளக்கக் குறிப்பு

முகவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநிலத்திற்காக ‘‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023’’–ஐ உருவாக்கி அளித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட கால வரம்பை கருத்தில் கொண்டு, 2023ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளைக் கொண்ட, ‘‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023’’ ன் இரண்டு தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்கள். இந்த தொலைநோக்குத் திட்டம் 2023 அனைத்து முக்கிய துறைகளிலும் நாட்டிலேயே மிகச் சிறந்த உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மாநிலமாகவும், மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும், நமது மாநிலத்தை உயர்த்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

மனிதவள மேம்பாட்டின் அனைத்து குறியீடுகளிலும், தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. வேகமான வளர்ச்சியுடன், நீடித்து நிலைக்கத்தக்க, அனைவரும் பங்கேற்கக்கூடிய வளர்ச்சியைப் பெற்றிடும் பொருளாதாரத்தை உருவாக்குவதே, இந்த பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த திட்ட நடைமுறையின் விளைவாக, வறுமை ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான மற்றும் மேம்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இம்மாநில மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வாய்ப்பு ஏற்படும்.

மாநிலத்தின் ஆண்டு திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டு திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச்செலவினங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகியவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பொறுப்புகள் ஆகும். நிர்வாகத் துறைகளால் சுற்றனுப்பப்படும் வளர்ச்சி திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. இந்த நோக்கத்திற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் நிர்வாகத்துறை என்ற முறையில் மாநிலத்திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை, கொள்கைகளை வகுக்க பயன்படுத்திக் கொள்கிறது. இத்துறை, அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான

ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்கிறது. இத்துறை, புவியியல் தகவலமைப்பு மூலம் மின்–ஆளுமை திட்டம் (e-governance) மற்றும் சிறப்பு முயற்சிகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் உட்பட சிறந்த, புதுமையான பல்முனைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. துறையின் வலைத் தளமான *www.tn.gov.in/department/23*-ல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.

1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரிப்பதுடன் மத்திய திட்டக்குழுவுடன் தொடர்புகொண்டு செயல்படுதல்;

ii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய அளவிலான திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. மாநிலத்தின் இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர் பயன்பாடு உட்பட முக்கிய திட்டங்களைத் தயாரித்து, செயல்படுத்துகின்ற திட்டங்களின் மீது மேற்பார்வை ஆய்வுகள் மேற்கொள்ளுதல்;

iv. திட்டப்பணிகள், இருபது அம்ச திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள்

ஆகியவற்றை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

v. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

vi. தொலையுணர்வு புவியியல் தகவல் அமைப்புகளை உருவாக்கி பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பது போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகமைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையானத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல். கடந்த காலங்களில் அரசு செயல்பாடுகளை கணினிமயமாக்குவதிலும் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் மற்றும் அதனால் மாநிலத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்த மாநிலத்தின் அணுகுமுறையினை வகுப்பதிலும் துறை முக்கிய பங்கு வகித்தது;

vii. சீரான பொருளாதார மற்றும் சமூக காரணிகளின் அடிப்படையில் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்;

viii. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை தயாரித்தல்;

ix. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு,

சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், மாநிலப் பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல், மற்றும் பரவச் செய்தல்;

x. திட்டப்பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

xi. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற சிறப்பு திட்டங்களை உருவாக்குதலும் செயல்படுத்துதலும் மற்றும் நக்சல் பாதிக்கக்கூடிய பகுதிகளில் சமூக– பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்;

xii. மாநிலத்திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல் படுவதற்கான வசதிகள் செய்தல்; மற்றும்

xiii. சிறப்பு முயற்சிகள் பிரிவின் கீழ் ‘மெட்ரோ இரயில்’ போன்ற புதிய மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.

2.0 துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு

துறையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றின் தன்மை பற்றியும் தகுதிநிலை பற்றியும் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி

மாநில அரசின் திட்டச் செலவினங்கள் திட்ட ஒதுக்கீடுகளைவிட சீராக அதிகரித்து அதிக வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. இவை ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திற்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்வதற்கு உதவியாக அமைந்துள்ளது என்பதை கீழ்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

திட்டம்	ஆண்டுகள்	ஏற்பளிக் கப்பட்ட ஒதுக்கீடு	செலவி னம்	விழுக் காடு
முதலாம் திட்டம்	1951–1956	86	80	93.0
இரண்டாவது திட்டம்	1956–1961	186	188	101.1
மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள்	1961–1969	608	613	100.8
நான்காவது திட்டம்	1969–1974	552	559	101.3
ஐந்தாவது திட்டம்	1974–1979	1,122	1,165	103.8
ஆறாவது திட்டம்	1980–1985	3,150	3,645	115.7
ஏழாவது திட்டம்	1985–1990	5,750	6,317	109.9
ஆண்டுத் திட்டம்	1990–1991	1,450	1,591	109.7
ஆண்டுத் திட்டம்	1991–1992	1,600	1,726	107.9
எட்டாவது திட்டம்	1992–1997	10,200	14,024	137.5
ஒன்பதாவது திட்டம்	1997–2002	25,000	25,036	100.1
பத்தாவது திட்டம்	2002–2007	40,000	43,568	108.9
பதினோராவது திட்டம்	2007–2012	85,344	92,656	108.6

2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007-2012)

மார்ச் **2012**ல் முடிவடைந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட **113** சதவீதம் அதிகரித்து, **85,344** கோடி ரூபாய் ஒதுக்கீட்டளவிற்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம், **2007–2012** திட்டக் காலத்தில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் **9** சதவீதத்தை அடைவதற்கான நோக்கம் கொண்டிருந்தது.

2.2.1 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளும் செலவினங்களும் ஆண்டுவாரியான ஒதுக்கீடு/ செலவினம்

ஆரம்ப திட்ட ஒதுக்கீடு 85,344 கோடி ரூபாய்

(ரூபாய் கோடியில்)

ஆண்டுத் திட்ட வருடம்	ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு	செலவினம்
2007– 2008	14,000	14,224
2008–2009	16,000	16,275
2009–2010	17,500	17,834
2010–2011	20,068	20,465
2011–2012	23,535	23,858
மொத்தம்	**91,103**	**92,656**

துறைவாரியான ஒதுக்கீடு/ செலவினம்

(ரூபாய் கோடியில்)

துறை	ஒதுக்கீடு	செலவினம்	விழுக்காடு
வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்தவை	11,145	10,427	93.6
ஊரக வளர்ச்சி	10,241	11,262	110.0
எரிசக்தி	10,743	12,669	117.9
தொழில் மற்றும் கனிமங்கள்	3,716	2,607	70.2
போக்குவரத்து	11,647	11,009	94.5
சமூக சேவைகள்	35,827	42,302	118.1
ஏனையவை	2,025	2,380	117.5
மொத்தம்	**85,344**	**92,656**	**108.6**

பதினோராவது திட்டக் காலத்தில் செலவினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டினை விட அதிகரித்துள்ளது என்பதனை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். எனினும், முக்கிய துறைகளான தொழில் மற்றும் விவசாயத்தின் வளர்ச்சி குறைந்த போதிலும், சேவைத் துறையில் அதிக வளர்ச்சி அடைந்துள்ளதால் 2007–2012 ஆம் ஆண்டுகளில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 8.58 சதவீதத்தை அடைவதற்கு வழியாக அமைந்தது.

2.2.2 2012-2013 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–2017) முதல் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2012–2013, 28,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில்

செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இறுதித் திட்டச் செலவினம் 28,528 கோடி ரூபாய் என்பதால் திட்ட ஒதுக்கீட்டை விட மகிழ்ச்சி அளிக்கும் வகையில் உயர்ந்துள்ளது.

2.2.3 2013-2014 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–2017) இரண்டாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2013–2014, 37,128 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஒதுக்கீட்டைவிட திட்டச் செலவினம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.4 2014-2015 ஆம் ஆண்டுத் திட்டம்

ஆண்டுத் திட்டம் 2014–2015, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–2017) மூன்றாம் ஆண்டாகும். ஆண்டுத் திட்டம் 2014–2015ன் திட்ட ஒதுக்கீடானது, ஆண்டுத் திட்டம் 2013–14ன் திட்ட ஒதுக்கீட்டினை விட 13.62% அதிகரிக்கப்பட்டு, 42,185 கோடி ரூபாயாக நிர்ணயிக்க கருதப்பட்டுள்ளது. சமீபத்தில், மத்திய திட்டக்குழு அனைத்து மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் மத்திய திட்ட ஒதுக்கீட்டினை, மாநிலத்திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி உதவியாக கருதவும், அதனை மாநிலத்திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாகக் கருதவும் முடிவு செய்துள்ளது. இந்த நடைமுறையினால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து தமிழ்நாடு அரசு அச்சம் கொண்டுள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மாநிலத்தின் முன்னுரிமைகளை பிரிதிபலித்தாலும் அல்லது இல்லாவிடினும், திட்டங்களின் வடிவமைப்பைப்பற்றி மாநில அரசு சொல்வதற்கு

ஒன்றுமில்லை. அல்லது திட்ட ஒதுக்கீட்டில் மத்திய அரசின் பகுதியினை நிர்வகிப்பதில் மாநில அரசிற்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. மத்திய ஒதுக்கீட்டினை குறைப்பது மற்றும் மத்திய நிதி உதவியினை விடுவிப்பதில் ஏற்படும் கால தாமதம் திட்டங்களின் செயல்பாட்டினை வெகுவாக பாதிக்கும். அதற்கான திட்டப்பணிகள், கூறுகள் மற்றும் திட்ட அளவு புது டெல்லியில், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் ஆகியோரிடையே வழக்கமாக நடைபெறும் கூட்டத்தில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.5 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவீதம் அதிகரித்து, மொத்த ஒதுக்கீடு 2,11,250 கோடி ரூபாய் என்ற அளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017), விரைவுபடுத்தப்பட்ட, நிலைக்கத்தக்க மற்றும் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இத்திட்ட காலத்தில் எய்துவதை உறுதி செய்யும் வகையிலும், மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11 சதவீதத்தை அடைவதற்கான நோக்கமும் கொண்டுள்ளது. இத்திட்டம் “தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023” ல் உள்ள குறிக்கோளை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.3 திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

ஒவ்வொரு மாதமும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட திட்டங்களின் செலவினங்கள் தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட துறைகளால் தெரிவிக்கப்படுகிறது. திட்ட ஒதுக்கீடு முழுமையாக எய்தப்பட்டதை உறுதி செய்யும் பொருட்டு, தலைமைச் செயலாளர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

2.3.1 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களையும் மத்திய மாநில அரசுகள் பங்கிட்டுக் கொள்ளும் திட்டங்களையும் ஆய்வு செய்தல்

மத்திய அரசின் முழுமையான அல்லது பகுதி பங்களிப்புடன் மாநில அரசின் சொந்த நிதி அல்லது கடன் பங்களிப்புடன் கூடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் மத்திய அரசு, மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களில் மைய அரசின் பங்கினை மாநில அரசின் திட்ட நிதி உதவியாகவும், இத்திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டை மாநில திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாகக் கருதவும் திட்டமிட்டுள்ளபடியால் மைய அரசின் பங்கினை உரிய நேரத்தில் பெறுவதை உறுதி செய்வதற்கு இத்திட்டங்களை தீவிரமாக கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.3.2 இருபது அம்சத் திட்டம் 2006–ன் ஆய்வு

இருபது அம்சத்திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு 2006ஆம் ஆண்டில்

“இருபதுஅம்சத்திட்டம் **2006**” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வருவாய் இழப்பினை ஈடுகட்டுதல், வேலைவாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி , சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு, நலிந்தபிரிவினருக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடப்பட்ட அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்–**2006** குறித்த மாநிலஅளவிலானஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் / நிறுவனங்களின் பல்வேறு இனவாரியான செயல்பாடுகள் குறித்த ஆய்வு அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் (Monitorable Items) செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு மாதமும் இத்துறையினால் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய புள்ளி இயல் மற்றும் திட்டசெயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

2.4 பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல்

100 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீட்டிலான பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையினால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில்

அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவலர்கள் குழு ஆய்வு செய்து கண்காணிக்கிறது. இந்நோக்கத்திற்காக பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் பின்வரும் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது:

i) எரிசக்தி,
ii) தொழில் மற்றும் தகவல் தொழில் நுட்பம்,
iii) நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள்,
iv) சென்னை பெருநகருக்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும்
v) இதர நகர உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் குடிநீர் திட்டங்கள்.

உயர்மட்ட அலுவலர்கள் குழு மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக் கட்டைகளைக் கண்டறிந்து, துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒத்துழைப்பு உட்பட இது போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகளை வழங்குகிறது.

2.5 புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு

புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு செயல்பாடுகளை அனைத்து அரசுதுறைகளிலும் ஒருங்கிணைத்து சீரிய முறையில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.19 திட்டம் மற்றும் வளர்ச்சி துறை நாள் 15.02.1984–ன்படி மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப துறை மாநிலத்தில் புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு முறையை செயல்படுத்தும் முனைப்பு

துறையாக நியமிக்கப்பட்டது. அனைத்து தொலையுணர்வு விவரங்கள் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு வரைபடங்களை பராமரிக்கும் பணிகளை தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்–ஆளுமை (TNeGA) முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து துறைகளுக்கும் தேவையான விவரங்கள் மற்றும் வரைபடங்களும் மத்திய விவர தொகுப்பிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில ஒருங்கிணைப்பு குழு புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு பணியினை ஆய்வு செய்து வருகிறது. முதன்மை செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியோரின் கூட்டுத் தலைமையின் கீழ் ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு திட்டங்களுக்கான கருத்துருக்கள் மீது முடிவுகள் மேற்கொள்ளுவதை மேற்பார்வையிட்டு வருகிறது.

2.6 புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல்

இத்துறை மாநிலம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவைகளை வழங்குவதில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாக உள்ளது. அத்தகைய விவரங்கள் அரசுத் துறைகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை

ஆதாரங்களிலிருந்தும், தனியார் துறைகள் உட்பட சேகரித்து தொகுக்கப்படுகின்றன.

துறைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மூலமாக பெறப்படுகின்றன. இத்துடன் நாட்டின் ஏனைய மாநிலங்களின் புள்ளி விவரங்களை, நமது மாநிலத்தின் தொடர்புடைய செயல்பாடுகளின் புள்ளி விவரங்களோடு ஒப்பு நோக்குவதற்கும் இத்துறை தகவல்களைச் சேகரிக்கிறது.

2.7 பெருந் திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல்

பல்வேறு அரசுத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்து அத்திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களை உண்மையில் சென்றடைந்ததை உறுதி செய்வது இத்துறையின் முக்கியமான பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகம் மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடனும், திட்டங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையில் உள்ள குழுவின் ஒப்புதலைப் பெற்று மதிப்பீடு செய்யும் பணி இயக்குநரால் மேற்கொள்ளப்படும். இயக்குநர், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை மற்றும் பிற துறைகளுடன் மாநில திட்டக் குழுவினையும் கலந்து மதிப்பீட்டிற்கான திட்டங்களை தேர்வு செய்கிறார். அத்துறைகளுடன் கலந்து செயல்முறை மற்றும் ஆராய வேண்டிய வழிமுறைகளை இறுதி செய்கிறார். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு ஆய்வுகளை

மேற்கொள்வதற்கு ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும்; ஆராய்ச்சி உதவியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும்; மதிப்பார்ந்த நிறுவனங்கள் மூலம் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் பகுதி–II திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் வெளியீடுகள் களப்பணி விவர சேகரிப்புகளின் முடிவுகள் முறையான பகுப்பாய்வு மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் திட்டங்களை நடுப்பகுதியில் சரிசெய்வதற்கும் கொள்கைகளை மாற்றுவதற்கும் ஆலோசனை வழங்கவும் ஆவணங்களாக வெளியிடப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கைகள் *www.tn.gov.in/dear/index.htm* என்ற அரசின் இணைய தளத்திலும் வெளியிடப்படுகின்றன.

2.8 சிறப்புத் திட்டங்கள், திட்டப்பணிகளைச் செயல்படுத்துதல்

1975–முதல் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிடையே மலைப்பாங்கான பெரிய வனப்பகுதிகளை எல்லைகளாகக் கொண்டு மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதியின் மேலும் வடக்கு வரை நீண்டு செல்லும் ஒப்பற்ற உயிரினச் சூழல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களை இத்துறை செயல்படுத்திவருகிறது. நீலகிரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களை எல்லைகளாகக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாக தனியே வகைப்படுத்தப்பட்டும், தென்பகுதியில் உள்ள ஏனைய மலைத்தொடர்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் உள்ளது. இவ்விரு திட்டங்களின் நிதியுதவியினை புதுப்பிப்பது குறித்து

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டங்களின் முதலீட்டினை கணிசமான அளவு உயர்த்தி மேலும் தொடரவும் அரசு வலியுறுத்தியுள்ளது.

2.8.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் 1975ஆம் ஆண்டு முதல் மத்திய திட்டக்குழுவின் 90 சதவிகித நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மலைப்பகுதியின் உயிரினப் பன்மயத்தினை பேணுதல், பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிகளுக்கு உறுதுணை அளிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கைச் சூழலைப் பேணுவதும், இயற்கைச் சூழலை மீளச்செய்வதும் ஆகும். உயிரினப் பன்மயத்தினை பேணவும், மலைவாழ் உயிரினச் சூழலுக்குப் புத்துயிர் ஊட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு அனைத்து வளர்ச்சிப்பணிகளும் திட்டமிடப்படுகின்றன. மத்திய திட்டக்குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிப்பகுதிகளாக பகுக்கப்பட்டு, இவற்றில் 37 முன்னுரிமை நீர்வடிப்பகுதிகள் தேர்வுசெய்யப்பட்டு பகுதி பகுதியாக பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த திட்டத்தில், வடிகால்களை சீர்செய்தல் மற்றும் விவசாயத்திற்கு உகந்த நிலத்தில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ற வேளாண் உற்பத்தி முறைகளைக்

கையாண்டு மழை நீரை சேமிப்பதன் மூலமாக குறு நீர்வடிப்பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 33 பெரிய நீர்வடிப்பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக, சிறப்பு மத்திய நிதியுதவியின் கீழ் ஆண்டு ஒதுக்கீடாக 90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடனாகவும் மத்திய திட்டக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2005–2006ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய நிதியுதவியின் மானியத்தொகையினை மட்டும் மத்திய அரசு விடுவித்து வருகிறது. கடன் பகுதி நிதிக்காக வெளிச்சந்தை மூலம் கடன் பெறுவதற்கு மாநில அரசுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. 2009–2010ஆம் ஆண்டு முதல் 10 சதவிகிதம் கடன் பங்கு, மாநில அரசின் பங்காக கருதப்படுகிறது.

2.8.1.1 உழவர் தொகுதிகள் அமைத்தல்

வணிகரீதியான வாய்ப்புகள் தோட்டக்கலை விவசாயிகளுக்கு அதிகமாக இருந்தாலும், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மிகவும் குறைந்த அளவிலான சந்தை வசதிகள் போன்றவை விற்றுமுதலை வெகுவாக பாதிக்கிறது. சிறிய விளை நிலங்கள், வருவாயில் சரிவு மற்றும் உள்ளீடுகளின் அதிக விலை ஆகியன உற்பத்தித் திறன் மற்றும் இலாபம் ஆகியவற்றை குறைக்கிறது. 2002ஆம் ஆண்டு அரசின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் விவசாயம், தோட்டக்கலை, மரம் வளர்ப்பு ஆகிய துறைகளில் ஒன்றுடன் ஒன்றிணைந்த உழவர் குழுக்களை ஆரம்பித்து, பின்னர் அவைகள் தேசிய வாழ்வாதார இயக்கத்தில் இணைக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு.2) துறையின் 29.02.2012 நாளிட்ட அரசாணை (நிலை)

எண். 51, 52 மற்றும் 53 ன் படி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் உள்ள மலைப்பகுதிகளில் உழவர் குழுக்கள் மற்றும் அதிகார அமைப்புகளை உருவாக்கும் வண்ணம் மாற்றி அமைக்கப்பட்டது. உள்ளீடுகளை இணைந்து வாங்கவும் பின்னர் சந்தைப்படுத்தும் முயற்சிகளில் இணைந்து செயல்படவும் அதன் வாயிலாக அவர்களுடைய நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்யவும் விவசாயிகள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். இதற்காக, அரசின் மற்ற திட்டங்களையும் ஒன்றிணைத்து செயல்படுத்தலாம். இந்த அணுகுமுறையானது பாரம்பரிய நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளைக் காட்டிலும் நல்ல பலனைத் தர வாய்ப்பாக அமையும்.

இந்த வழிக்காட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 21 கிராமங்களில் உள்ள 5 பெரு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அமைந்த 19 குறுநீர்ப்பிடிப்பு பகுதிகளில் உள்ள 527 விவசாயிகளுடைய 349.24 ஹெக்டேர் நிலப்பரப்பில் 25 உழவர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

2.8.1.2 2013–2014ஆம் ஆண்டின் செயல்பாடு

2013–2014ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு 47.34 கோடி ரூபாய். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், மண்வளப் பாதுகாப்பு, காடுவளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

மேம்பாடு, சிறுபாசனம், சாலைகள், மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக பெருமளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

2.8.1.3 2014–2015 ஆம் ஆண்டிற்கான திட்டச் செயற்குறிப்பு

ஆண்டுத் திட்டம் 2014–15க்கு 47.34 கோடி ரூபாய் மத்திய திட்டக்குழு ஒதுக்கீடு செய்துள்ளது. 2014–2015 ஆம் ஆண்டுக்கான வரைவு ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய திட்டக்குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டத்தில், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாடு, சிறுபாசனம், சாலைகள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

2.8.2 மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975–76ல் தொடங்கப்பட்டு மத்திய திட்டக்குழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது (90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடன்). ஆண்டுத்திட்டம் 2009–2010 முதல் 90 சதவிகிதம் மத்திய அரசின் மானியமாகவும் 10 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் மாற்றப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுப் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது, தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் இருந்து

தெரிந்தெடுக்கப்பட்ட 60 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 8 மாவட்டங்களில் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் முழுமையாகப் பயனடைகின்றன. மீதமுள்ள 6 மாவட்டங்களில் சில பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்ட செயலாக்கத்துக்கென துறையில்லாத நிலையில் இத்திட்டம் ஒரு முன்னோட்ட அடிப்படையில் 2010–2011 ஆண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA) யிடம் செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டில் கூடுதலாக விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த இந்த முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினை கூடுதல் கண்காணிப்புடன் செயல்படுத்த கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மீதமுள்ள மூன்று மாவட்டங்களிலும் இந்த முகமையின் மூலமாக செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:–

(i) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையை பேணுதல்.

(ii) இப்பகுதியில் அபரிமிதமாக காணப்படும் மாறுபட்ட மரபணு உயிரினங்களை பாதுகாத்தல்.

(iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளை சரி செய்தல்.

(iv) அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் ஏற்படும் அபாயம் பற்றி புரியவைத்து சுற்றுச் சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்.

இத்திட்டத்தில் மண்வளப்பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, விவசாயம், ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர் நலன், சாலைகள், சுற்றுலா, கால்நடை பராமரிப்பு, கதர் மற்றும் கிராமத் தொழில்கள், மீன்வளம், சிறு பாசனம், பேரூராட்சிகள் மற்றும் பட்டு வளர்ப்பு ஆகிய துறைகளில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. 2013–2014 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 64 நீர்வரத்து பகுதிகள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

2.8.2.1 உழவர் தொகுதிகள் அமைத்தல்

அரசாணை (நிலை) எண். 51, 52 மற்றும் 53, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள்: 29.02.2012ல் மலைப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளில் ‘‘உழவர் தொகுதிகள்’’மற்றும் ‘‘குழுக்கள்’’ அமைப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளின் அடிப்படையில் 2013–2014 ஆம் ஆண்டில் மேற்குத்தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டத்தில் தோட்டக்கலை பயிர் (கேரட்) பயிரிடுவதற்காக 4 கிராமங்களில் உள்ள 2 பெரு நீர்பிடிப்பு பகுதிகளில் அமைந்த 10 குறுநீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள

310 விவசாயிகளுடைய **130** ஹெக்டேர் நிலப்பரப்பில் **4** உழவர் குழுக்கள் அமைக்கப்பட்டு பயனாளிகளின் ஆழ்ந்த ஈடுபாட்டினால் சிறந்த முன்னேற்றத்தில் உள்ளது.

2.8.2.2 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு

2013–2014 ஆம் ஆண்டுத்திட்டத்திற்கு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த மத்திய திட்டக்குழு **22.84** கோடி ரூபாய் ஒப்புதல் அளித்திருந்தது. மாநில அரசின் செயல்திறனின் அடிப்படையில் **2014–2015** ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு **22.84** கோடி ரூபாய் மத்திய திட்டக் குழு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தில் முன்புள்ள முன்னுரிமைப் பணிகளோடு உழவர் தொகுதிகள் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தப்படும்.

2.9 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், **29.04.2003** ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்:**31**–இல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒருபகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது இத்துறையின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட நிருவாக துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் கண்டறியப்பட்டது.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின், **02.11.2006**ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் **146**–இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை ‘‘சிறப்பு முயற்சி’’ திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டினை முதிர்விற்குக் கொண்டுவருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் **18.01.2007**ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் **10**–ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3.0 துறைத் தலைமையிடங்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

i. மாநிலத் திட்டக் குழு
ii. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை
iv. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இதற்கென ஏற்படுத்தப்பட்ட தனிச் செயலாளரின் (சிறப்பு முயற்சிகள்) கீழ் உள்ள ஒரு கூட்டுத் துறை நிறுவனம்

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக பின்வருமாறு:

3.1.1 மாநிலத் திட்டக்குழு

தமிழ்நாட்டில், **1971** ஆம் ஆண்டு மே திங்கள் **25**ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மாநிலத் திட்டக்குழு ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு இத்திட்டக்குழு அளித்து வருகிறது. **02.07.2011** அன்று ஒரு துணைத்தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டு இம்மாநிலத் திட்டக்குழு திருத்தி அமைக்கப்பட்டது. அரசு முதன்மைச் செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசு முதன்மை செயலர், நிதித்துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல் சார் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறார்.

3.1.2 மாநிலத் திட்டக்குழுவின் முதன்மையான பொறுப்புகள்:

i. ஐந்தாண்டுத் திட்டத்தில் அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் மற்றும் அத்திட்டத்தில்

சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகளை அரசிற்கு வழங்குதல்

ii. வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்களை அமைத்தல் மற்றும் வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்புதல்

iii. நிதி ஆதாரங்களுக்கேற்ப வரவு செலவுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்.

iv. வரைவு ஆண்டுத் திட்டங்களை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்.

v. ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவது குறித்தும் காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்.

vi. ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களை திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசிற்கு ஆலோசனை அளித்தல்.

vii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டின் அடிப்படையில்

திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்.

viii. நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை திறம்பட செயல்படுத்துதல்.

ix. மாவட்டத் திட்டக்குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிடல் நடவடிக்கைகளை மாவட்டம்/வட்டாரம்/ கிராம அளவில் மேற்கொள்ளுதல்.

x. ஐந்தாண்டுத் திட்டம் / ஆண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டங்களை தயாரிப்பது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

xi. மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் மாற்றம் / பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிக் காரணிகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்து அவற்றை சரிசெய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்.

xii. திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல், மற்றும்

xiii. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை தேவைப்படும் பொழுது அரசுக்கு அளித்தல் .

3.1.3 புதிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்

ஆண்டுத் திட்டங்களைத் தயாரித்தலின் ஒரு பகுதியாக, **2014–15** ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களை மாநிலத் திட்டக்குழு மதிப்பீடு செய்தது. இந்த திட்டக்குழு பகுதி–II புதிய திட்டங்களை இரு பிரிவுகளாக பெற்றது - பிரிவு–I ன் கீழ் வழக்கமான மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்களை அனைத்துத் துறைச் செயலர்களிடமிருந்தும், பிரிவு–IIன் கீழ், புதிய மற்றும் நூதன திட்டங்களை அனைத்துத் துறைச் செயலர்களிடமிருந்தும் மாவட்ட ஆட்சியர்களிடம் இருந்தும் பெறப்பட்டன. **2014** ஜனவரி திங்களில், அரசுச் செயலர்களுடனும், துறைத் தலைவர்களுடனும், புதிய திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடி, **150.01** கோடி ரூபாய்க்கான புதிய திட்டங்களைப் பரிந்துரை செய்தது. அவற்றிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3.1.4 தொடர் திட்டங்களுக்கான மறு ஆய்வு

அரசு ஆணை எண்.**86**, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் **03.09.2013**–ல், குறிப்பிட்டுள்ளபடி வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் ஆண்டுத் திட்டம் **2014–15** தயாரிப்பின் ஒரு பகுதியாக குறிப்பிட்ட **10** துறைகளின் தொடரும் திட்டங்களுக்கான மறு ஆய்வு மாநிலத் திட்டக்குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மறு ஆய்வு, செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் அரசின் கொள்கை முடிவுகளை சார்ந்து செயல்படுகின்றனவா அந்த திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு சரியான அளவில் அளிக்கப்படுகின்றனவா மற்றும் அத்திட்டங்கள் சார்ந்த துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்கின்றதா மற்றும் மாநில முழுமைக்குமான சமூக பொருளாதார

முன்னுரிமைகளை அடைய உதவி புரிகின்றனவா என்பதனை அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டன.

மேலும், தொடர் திட்டங்களை ஆய்வு செய்து திட்டத்தை தற்போதுள்ள வடிவமைப்பு மற்றும் ஒதுக்கீட்டின் அளவுடன் தொடர்வதற்கான தேவை அல்லது திட்ட ஒதுக்கீட்டை குறைப்பது மற்றும் திட்டத்தின் அமைப்பினை மாற்றுவது அல்லது திட்டத்தினை முழுவதுமாக நிறுத்துவது அல்லது திட்டத்தினை திட்டம் சாராதத் திட்டமாக மாற்றுவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டன.

இந்த மறு ஆய்வின் மூலமாக குறைவான செயல்பாடு கொண்ட திட்டங்கள் கண்டறியப்பட்டு அத்திட்டங்களை திருத்தி அமைப்பதற்கும் தேவைக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு ஆண்டுத் திட்டம் சிறந்த முறையில் தயாரிப்பதற்கு தீர்வு காணப்பட்டது. மேலும் மாநிலஅரசு, மையஅரசு மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருந்தது.

3.1.5 தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

‘‘தமிழக அரசால் **2011** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், மாநிலத்திட்டக்குழுவின் துணைத் தலைவர் தலைமையில், “தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்” என்ற அமைப்பை மாநிலத் திட்டக்குழுவில் ஒரு நிரந்திர அமைப்பாக செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியம், நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை நிர்வகிக்கவும், மேம்படுத்தவும்,

பல்வேறு அரசு துறைகள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் / பங்குதாரர்களுடன் இணைந்து செயல்பட்டு புதிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுக்க வழிவகை செய்கிறது. தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம் நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், கருத்தரங்கு மற்றும் ஆராய்ச்சிகள் / விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகிறது.

3.1.6 தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியத்தின் 2013-14 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்:

தமிழ் நாட்டிற்கு நிலப்பயன்பாட்டு கொள்கை தயாரிக்க ஒரு முன்னுரை கூட்டம் **28.01.2013** அன்று மாநிலத் திட்டக்குழுத் துணைத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொடர்புடைய அரசு செயலர்கள் / துறைத்தலைவர்களை நியமித்து, நிலப்பயன்பாட்டு கொள்கை தயாரிப்பினை மேற்பார்வை செய்யவும் முடிவு எடுக்கப்பட்டது. வரைவு நிலப்பயன்பாட்டு கொள்கை தயாரிக்க தேவையான விபரங்கள் / பணிகள் மேற்கொள்ள பல்வேறு செயல்பாடு குழு அந்தந்த துறையில் அமைக்கப்படவுள்ளது.

மாநிலத் திட்டக்குழு, வரைவு நில பயன்பாட்டு கொள்கை தயாரிப்பதற்கான அடிப்படை பணிகளில் ஈடுபட்டுள்ளது. அதன்பொருட்டு **2013–14** ஆம் ஆண்டில் நில பயன்பாடு மற்றும் நிலபரப்பு மாற்றங்கள் தொடர்பான **6** ஆராய்வுகள் துவக்கப்பட்டுள்ளன. இவ்வாராய்வுகள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் மற்றும் தீர்வுகள் தமிழ் நாட்டின் நில பயன்பாடு மாற்றங்களை புரிந்து கொள்ள ஏதுவாக அமையும். மேலும், தமிழ் நாட்டின் நில பயன்பாட்டு மேலாண்மைக்காக, தேவையான நில

அளவை மட்ட குறிகள் மற்றும் வழி காட்டும் நெறிமுறைகள் உருவாக்கப்பட உள்ளது.

2013-14 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் இரண்டு கூட்டங்கள் நடைபெற்று உள்ளது. 2013-14 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கான வரைவு நிலப்பயன்பாட்டு கொள்கை தொடர்புடைய ஆறு ஆராய்வுகள் துவக்கப்பட்டுள்ளன, நீர் மேலாண்மை தொடர்புடைய ஒரு ஆராய்வும் மற்றும் காலநிலை இடர் மேலாண்மை தொடர்புடைய திட்டமும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாராய்வுகளில் குறிப்பிடப்படும் பரிந்துரைகள், நிலப்பயன்பாட்டு கொள்கை தயாரிப்பு பணியினை மேற்கொள்ள உந்துதலாக அமையும். தற்சமயம், இவ்வாராய்வுகள் துவங்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணிகள் 30.9.2014–ல் முடிவுபெறவுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் வட்டார வாரியாக 2001 – 2002 முதல் 2011–2012 ஆம் ஆண்டு வரையிலான 10 வருடங்களுக்கு 9 வகையான நிலப்பயன்பாடு தொடர்பான புள்ளி விபரங்கள் பெறப்பட்டு வருகிறது. இவ்விவரங்கள் நிலப்பயன்பாட்டிற்கான மேலாண்மை தகவல் அமைப்பு ஏற்படுத்தி, அத்தகவல்களை தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு கொள்கை தயாரிக்கவும் உதவியாக அமையும்.

3.1.7 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

வருமானம், வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின மேம்பாடு இவற்றில் மாவட்டங்களுக்கு இடையே மற்றும் மாவட்டத்திற்குள் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைச் சீரமைக்க உருவாக்கப்பட்ட புதிய திட்டமே

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் வாயிலாக 100 மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் நான்கில் ஒரு பங்கான நகர பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், அனைத்து மாநகராட்சிகளின் வார்டுகளும் பயனடையும். மேற்சொன்ன சமூக பொருளாதார காரணிகள் வாயிலாக பின்தங்கிய பகுதிகள் (ஊரக மற்றும் நகர) கண்டறியப்படுகின்றன. இந்த திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் 2014–15 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில திட்டக்குழுவின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

மாவட்ட அளவில் முன்மொழியப்படும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும் கண்காணிக்கவும் மாநில அளவில் ஒரு உயர் மட்ட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், தொலைநோக்கு திட்டம் தயாரித்தல், தகுந்த திட்டங்களை உருவாக்குதல், திறனை மேம்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாவட்ட நிருவாகத்திற்கு உதவிட, வள நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஜுன் 2013–ல் மாவட்ட திட்ட அலுவலர், நுட்ப உதவியாளர் அவர்களின் திறன் மேம்பாட்டை வளர்க்க ஒரு பயிலரங்கம் மற்றும் பயிற்சி நடைபெற்றது. மாநிலத் திட்டக்குழு மூன்று வட்டாரங்களுக்கான மாதிரி தொலைநோக்கு திட்டம் தயாரிப்புப்பணியை மேற்கொண்டுள்ளது. இந்த தொலைநோக்கு திட்ட தயாரிப்புப்பணியில் மாவட்டத் திட்டக்குழுக்கள் ஈடுபட்டுள்ளன. இவ்வறிக்கை மாநில உயர் மட்ட குழுவின் முன்னிலையில் வைக்கப்பட்டது.

2013–14 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக **17.85** கோடி ரூபாயில் பின் தங்கிய **15** மாவட்டங்களுக்கான **35** திட்டங்களுக்கு மாநிலத் திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. உயர் மட்ட குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள இவ்வனைத்து **35** திட்டங்களுக்கும் தேவையான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக **82.06** கோடி ரூபாயில் பின் தங்கிய **22** மாவட்டங்களுக்கான **98** திட்டங்கள் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஆகியவற்றை பெருக்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3.1.8 மனித மேம்பாட்டு அறிக்கை தயாரித்தல்

மாநிலத் திட்டக்குழு **32** மாவட்டங்கள் மற்றும் மாநிலத்திற்கான மனித மேம்பாட்டு அறிக்கையை ‘‘மனித மேம்பாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகளின் இடைவெளியை நீக்கும் திட்டத்தின்’’ கீழ் தயாரித்து வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு **340** இலட்சம் ரூபாய், அதில் **240** இலட்சம் ரூபாய் மாநில அரசின் பங்கு, **100** இலட்சம் ரூபாய் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் பங்காகும். இத்திட்டத்தின் காலம் **2013–2016** ஆகும்.

மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கை மற்றும் மாநில மனித மேம்பாட்டு அறிக்கை தயாரிக்க வள நிறுவனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதன் தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிலைகளில் உள்ள அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு பயிலரங்கங்கள் நடைபெற்றன. புள்ளி விவர சேகரிப்பு, புள்ளி விவர மதிப்பீடு மற்றும் குறியீடு கணக்கீடு

ஆகியவை நிறைவுபெற்றுள்ளன. வரைவு அறிக்கைகள் தயாரிப்பும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

3.1.9 2014–15 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

மாநிலத் திட்டக்குழு, 2014–15 ஆம் ஆண்டில், அரசு திட்டங்கள் செயல்படுத்துவதில் முக்கிய பிரச்சனைகள், மாநிலத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் செயல்பாட்டை பாதிக்கும் காரணிகளை கண்டறிய ஆராயச்சிகள் / பயிலரங்குகள் / கருத்தரங்குகள் / பயிற்சிகள் நடத்த உத்தேசித்துள்ளது. மேலும் மாநில திட்டக்குழுவின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அலுவலக கணினிமயமாக்கலுக்கும் மொத்த ஒதுக்கீடாக 198.80 இலட்சம் ரூபாய் புதிய திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

3.1.10 பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் மேற்கொள்ளுதல்

வளர்ச்சி குறித்த முக்கிய பிரச்சனைகள் மற்றும் வருங்காலத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டிய இலக்குகள் வல்லுநர்களோடு பயிலரங்கங்கள் / கருத்தரங்குகளை நடத்துவதன் வாயிலாக மாநிலத் திட்டக்குழுவினரால் கண்டறியப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக 2013-14ஆம் ஆண்டில் 34 கருத்தரங்கங்கள் மற்றும் பயிலரங்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அக்கூட்டத்தின் பரிந்துரைகள் புத்தகங்களாக தயாரிக்கப்பட்டு அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும் 2013-14ஆம் ஆண்டில் பல்வேறு துறைகள் தொடர்புடைய முக்கிய பிரச்சனைகள் குறித்து 20 ஆராய்வுகள் துறைசார்ந்த வல்லுனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் **2014-15**ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் துறைகளிடம் கோரப்பட்டுள்ளது.

3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

3.2.1 மாநில மற்றும் மைய அரசுகளின் திட்ட உருவாக்கத்திற்கு தேவையான விவரங்களை சேகரித்து, தொகுத்து உரிய நேரத்தில் வழங்குதல் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் நோக்கமாகும். மாநிலத்தின் புள்ளிஇயல் சேகரிப்பு பணியில் இத்துறை முகமை அமைப்பாக செயல்படுகிறது. முதன்மை துறை, தொழில் துறை மற்றும் சேவை துறை ஆகியவற்றிலிருந்து வேளாண்மை, தொழில், மாநில வருவாய், மாவட்ட வருவாய், விலைவாசி முதலிய விவரங்களை சேகரித்து, தொகுத்து தேவையானவர்களுக்கு வழங்கி வருகிறது. மேலும், மைய மற்றும் மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் ஆய்வு மற்றும் அறிக்கைகளை தயாரித்து வழங்கி வருகிறது.

இத்துறைக்கு கீழ் குறித்த திட்டம் சார் மற்றும் திட்டம் சாரா பணிகள் முன்னுரிமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3.2.2 திட்டம் சார் பணிகள்

மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1. ஒன்பதாவது வேளாண்மைக் கணக்கெடுப்பு

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வேளாண்மைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இக்கணக்கெடுப்பு, வேளாண்மை சார்ந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கும் முக்கியப் பணியாகும். நாட்டின் வேளாண்மை குறித்த

புள்ளி விவரங்களை பெருமளவில் சேகரித்தலும், தொகுத்தலும் இத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். இக்கணக்கெடுப்பு கைப்பற்றுதாரர்களை முக்கிய அலகாகக் கொண்டு நடத்தப்படும் கணக்கெடுப்பாகும். நிலப் பதிவேடுகளிலிருந்து நில சாகுபடியாளர்களின் சமூகநிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசனத் தன்மை, பயிர் சாகுபடி முறை, குத்தகைத் தன்மை, கால்நடைகள், வேளாண் உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பயன், பூச்சிக் கொல்லி, உரப் பயன்பாடு ஆகிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

9-வது வேளாண்மைக் கணக்கெடுப்பு 2010-11ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு முதற்கட்டப் பணியின் அறிக்கை மைய அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப்பணிக்கான (எச்.1 படிவம்— சாகுபடி முறை, கைப்பற்றுதாரர்களின் சமுதாய நிலை, நிலப்பயன்பாடு, கால்நடை) அறிக்கையும் முடிவடைந்து மைய அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டப் பணியான இடுபொருள் ஆய்வு விவரங்கள் சேகரிக்கப்பட்டு தற்போது கணினியில் விவரங்கள் பதியப்பட்டு வருகிறது.

2. ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. நிறுவனங்களின் எண்ணிக்கையும், அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் திரட்டி விரிவான புள்ளிவிவர கட்டமைப்பை உருவாக்குவதே பொருளாதாரக் கணக்கெடுப்பின் நோக்கமாகும். இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு

அமைப்புசாரா துறைக்கு தேவையான தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிடல், வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான அடிப்படை விவரங்களை இக்கணக்கெடுப்பு வழங்குகிறது. இந்த பொருளாதாரக் கணக்கெடுப்பு மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

- 6வது பொருளாதாரக் கணக்கெடுப்பிற்கான கணக்கெடுப்பு பணி தமிழ்நாடு முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

- பொருளாதாரக் கணக்கெடுப்பு பணிகள் செவ்வனே நடைபெற தமிழ்நாடு அரசு ஆணை (நிலை) எண் 96, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 13.06.2011 க்கு இணங்க மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- தமிழ் நாட்டில் ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்துவதற்காக இந்திய அரசின் மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் மொத்த செலவாக 37.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அதில் முதல் தவணையாக 60.08 இலட்சம் ரூபாய் 2012–13ஆம் ஆண்டிற்கு விடுவித்துள்ளது. மேலும், இரண்டாவது தவணையாக 28.39 கோடி ரூபாய் 2013–14ஆம் ஆண்டிற்கு விடுவித்துள்ளது.

- ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பினை தமிழ்நாட்டில் நடத்துவதற்கான பணியிடங்கள்

உருவாக்கத்திற்கும் **30** மாதங்கள் செயல்பாட்டில் இருக்கவும் இந்திய அரசின் மத்திய புள்ளி இயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தனது இசைவை தெரிவித்துள்ளது.

3. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்கள் குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு

பழம், காய்கறி மற்றும் சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்களுக்கான விளைச்சல் விகிதத்தை பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் துல்லியமாக கண்டறிந்து அதன் மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் கணக்கிட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தோட்டக்கலைப் பயிர்களான மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய பழவகைப் பயிர்களுக்கும் மற்றும் தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்கான விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட **2013–14**ஆம் ஆண்டில் **616** கிராமங்களில் **1232** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. **2013–14**ஆம் ஆண்டில் சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர் திட்டத்தின் கீழ், மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக் கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய பயிர்களில் **647** கிராமங்களில் **1294** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

4. தேசிய தொழில்நுட்ப மனிதவள தகவல் திட்டம்

தேசிய தொழில்நுட்ப மனிதவள தகவல் திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டில் உள்ள **1342** தொழிற்கல்வி நிறுவனங்களில் **575** பொறியியல் கல்லூரிகள், **464** பாலிடெக்னிக்குகள், **15** உணவக மேலாண்மை தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் உணவகத் தொழில்நுட்ப பயிலகங்கள், **64** மருந்தாளுநர் கல்லூரிகள் மற்றும் **224** மேலாண்மை கல்வி நிறுவனங்களிலிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்தின் தொழில்நுட்ப மனிதவளத்தின் தேவை மற்றும் அளிப்பின் சமன்பாட்டினை கண்டறிய மேற்காணும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் விவரங்களை மத்திய அரசு சேகரித்து வருகிறது.

5. இந்திய புள்ளி இயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்

இந்திய புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டம் (India Statistical Strengthening Project) என்ற மைய அரசின் திட்டத்தின் கீழ் மாநில பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, தமிழக அரசு மைய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை **28.09.2011**-ல் ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- மாநிலத்தில் புள்ளிஇயல் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் மேலாண்மையினை மேம்படுத்துதல்
- புள்ளி இயல் மனித வளத்தினை மேம்படுத்துதல்

- உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
- தகவல் தொழில்நுட்பவியலை உள்ளடக்கிய செயல் இலக்குடன் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் மற்றும்
- புள்ளி இயல் செயல்பாட்டினை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் கீழ் காணும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

- துறைத் தலைமையிடத்திற்கு 4.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட ஆணைப் பெறப்பட்டு கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், 242 வட்டாரங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை மூலமாக வட்டாரப் புள்ளிஇயல் ஆய்வாளார்களுக்கென 6.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த கட்டிடம் கட்ட ஆணை வழங்கப்பட்டு, இதுவரை 223 வட்டார புள்ளி இயல் ஆய்வாளர் அலுவலக கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 5 மண்டல புள்ளிஇயல் இணை இயக்குநர், 14 மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் மற்றும் 49 கோட்டப் புள்ளிஇயல் உதவி இயக்குநர் அலுவலக கட்டிடங்கள் கட்டும் பணி பொதுப் பணித் துறையினால்

மேற்கொள்ளப்பட்டுவருகிறது. பெரும்பாலான இடங்களில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

- புள்ளிஇயல் பணியாளர்களின் திறனை மேம்படுத்த உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தில், மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டு, **01.05.2012** முதல் துறைத் தலைமையிட கட்டிடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு கட்டிடம் கட்டப்பட தேவையான இடம் சென்னை மாவட்டம், மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், களிக்குன்றம் கிராமத்தில் கண்டறியப்பட்டு உயர் கல்வித் துறையினை கலந்து ஆலோசித்து கட்டிடப் பணியினை விரைவில் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பயிற்சி நிறுவனத்தின் மூலம் இதுவரையில் **908** நபர்களுக்கு பல்வேறு தலைப்பின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6. மாநில மற்றும் மாவட்ட அளவில் 13—வது நிதிக் குழுவின் மானியத்தின் மூலம் புள்ளி இயல் அமைப்பை வலுப்படுத்துதல்

தரமான புள்ளி விவரங்கள் அடிப்படையில் முக்கிய கொள்கை முடிவுகள் எடுக்க ஏதுவாகவும், மாநிலங்களின் புள்ளி விவரத் திறனை அதிகரிக்கவும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தேவைப்படும் புள்ளி விவரங்களை

துல்லியமாக குறிப்பிட்ட காலத்திற்குள் அளிப்பதற்கு ஏதுவாகவும், இந்திய புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் கொணரப்படாத இனங்களில் 13–வது நிதிக்குழு ஒரு மாவட்டத்திற்கு 1 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 31 கோடி ரூபாய் நிதி நமது துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய நிதித் துறை இதற்கான வழிமுறைகளை 2010–11 முதல் 2014–15 ஆம் ஆண்டு வரை கீழ் குறித்த இனங்களில் மேற்கொள்ள சிறப்பு இலக்குகளை திட்டமிட்டுள்ளது.

1. வணிக நிறுவனப் பட்டியலை (Business Register) தயாரித்தலும் அதன் நிலையை உயர்த்துதல்.
2. உள்ளாட்சி நிறுவனங்களின் வரவு–செலவின அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
3. வேளாண்மைப் பணிகள் தொடர்பான புள்ளிஇயல் தரத்தினை மேம்படுத்துதல்.
4. மத்திய மாநில மாதிரிகளின் விவரங்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் புள்ளி விவரங்கள் தயாரித்தல்.
5. மாவட்ட அலுவலகங்களை மாநில தலைமையகத்துடன் இணையதள/உள்தள வலைய வசதியுடன் இணைத்தல்.

மேற்காணும் சிறப்பு இலக்குகள் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானவையாக இருப்பதாலும் வரும் ஆண்டுகளில் 13வது நிதிக்குழு மானியத்தின் மூலம் செயல்படுத்த உள்ளது.

2013–14ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஆய்வுகள் மற்றும் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன:

1. தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் மூலம் பத்து முக்கிய பயிர்களுக்கான சாகுபடி செலவீனம் குறித்த ஆய்வு மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்படுகிறது.

2. தமிழ் நாடு கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூலம் உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு செய்வதற்கு தேவையான திருத்திய வீதம் மற்றும் விகிதாச்சாரங்கள் கணக்கிடுதல்.

3. மீன் வளங்கள் மூலம் கிடைக்கும் உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு செய்வதற்கு தேவையான திருத்திய வீதம் மற்றும் விகிதாச்சாரங்கள் மீன்வளத் துறை மூலம் கணக்கிடுதல்.

4. அனைத்து வருவாய் கிராமங்களிலும் பயிர் பரப்பு மற்றும் நில வகை பயன்பாடு புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

5. உற்பத்தி துறையில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனத்தின் பங்களிப்பினை மதிப்பீடு செய்தல் குறித்த ஆய்வு.

6. மாவட்ட மற்றும் மாநில அளவில் வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை பற்றி ஆள்திறன் மதிப்பீடு செய்தல்.

7. மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு செய்வதற்கு உற்பத்தி துறையில் ஆண்டு தொழில் நிறுவனங்களுக்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளுதல்.

8. வணிக நிறுவனப் பட்டியல் தயாரித்தலை தொடர்தல்.

9. மைய மற்றும் மாநில அரசுகளின் மாதிரிகளை ஒருங்கிணைத்தல்.

10. பத்து முதன்மைப் பயிர்களுக்கான மாவட்ட அளவிலான உற்பத்தியை கணக்கிடுதல்.

7. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோக புள்ளி விவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் மூன்று பருவத்திலும் (காரிப், ராபி, கோடை), பயிர் வாரியாக நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது. வருவாய் துறை, புள்ளிஇயல் துறை மற்றும் வேளாண்மை துறை அலுவலர்களால் ஒவ்வொரு கிராமங்களிலும் பயிர் பரப்பாய்வு ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

2013–14ஆம் ஆண்டுக்கு 3485 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு காரீப் பருவத்திற்கான மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு கூடுதல் புள்ளி இயல் ஆலோசகர், புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

8. பயிர் புள்ளி விவரங்கள் மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர்களால் பயிர் பரப்பு கணிக்கப்பட்ட பின்னர் பயிர் பரப்பாய்வு செய்தலும், அடங்கலில் கிராமத்திற்கான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில்

கணிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இப்பணிகளானது மத்திய மற்றும் மாநில அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இத்திட்டமானது கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வுசெய்து, அவற்றை களைய தக்க வழி வகைகளை ஏற்படுத்தி புள்ளி விவரங்களின் தரத்தினை உயர்த்துவதாகும்.

இத்திட்டம் கீழ் குறித்த நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

- **பயிர் பரப்பில் மாதிரி ஆய்வு (ஏ.எஸ். 1.0 படிவம்)**

2012–13ஆம் ஆண்டு பயிர் பரப்பாய்வுப் பணிக்கான ஏ.எஸ். 1.0 படிவங்கள் மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு (260 கிராமங்கள் வீதம்) I, II & III பருவங்களுக்கு அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ்.1.0 படிவங்களின் இறுதி அட்டவணைகள் மூன்று பருவங்களுக்கும் **2011–12**ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டு, தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு (பரிதாபாத்) அனுப்பப்பட்டுள்ளன.

- **அடங்கல் பதிவேட்டின் பக்கவாரியான கூட்டுத்தொகை (ஏ.எஸ். 1.1 படிவம்)**

2012–13ஆம் ஆண்டுக்கு பயிர் பரப்பாய்வு பணிக்காக தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின் அடங்கலின் பக்கவாரியான பயிர் பரப்பு விவரங்களின்

கூட்டுத்தொகை சரிபார்த்தல் சம்பந்தமான ஏ.எஸ்.1.1 படிவங்கள் மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு (260 கிராமங்கள் வீதம்) அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ். 1.1 படிவங்களின் இறுதி அட்டவணைகள் 2011–12ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டு, தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **பயிர் அறுவடை பரிசோதனை மேற்பார்வைப் பணி (ஏ.எஸ். 2.0 படிவம்)**

2012–13ஆம் ஆண்டுக்கு பயிர் அறுவடை பரிசோதனை ஆய்வுக்கான ஏ.எஸ்.2.0 படிவங்கள் 780 பரிசோதனைகள் வீதம் மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஏ.எஸ்.2.0 படிவங்களின் இறுதி அட்டவணைகள் 2011–12ஆம் ஆண்டுக்கு நெல் (கார், சம்பா, நவரை) மற்றும் இதர பயிர்களுக்கு (சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, கரும்பு, வேர்க்கடலை மற்றும் எள்) தயாரிக்கப்பட்டு தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு (பரிதாபாத்) அனுப்பப்பட்டுள்ளன.

3.2.3. செயல்படுத்தப்படும் மற்றும் புள்ளிஇயல் திட்டங்களின் சுருக்க விவரம்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டம் சார் மற்றும் திட்டம் சாரா மற்ற திட்டப்பணிகள் மற்றும் அறிக்கைகளின் சுருக்க விவரம் பின் வருமாறு.

வேளாண் புள்ளிஇயல்

1.	பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி முன்மதிப்பீடு	ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர், டிசம்பர், மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன்மதிப்பீடு செய்யப்படுகின்றன.
2.	ஜமாபந்தி மூலம் இறுதி செய்யப்படும் கிராமவாரியான பரப்பு	ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும் கிராம வாரியான பயிர் பரப்பு விவரங்கள் ஜமாபந்தியில் இறுதி செய்யப்பட்டு மாவட்ட வாரியாகவும், மாநில அளவிலும் தொகுக்கப் படுகின்றன.
3.	பொது பயிர் மதிப்பீட்டாய்வு	சுமார் 8300 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு முக்கியமான 16 பயிர்களுக்கு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப் படுகின்றன.
4.	பழங்கள், காய்கறிகள் ஆகியவை குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு	மா, பலா, வாழை, அன்னாசி, கொய்யா, ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை ஆகிய 8 பழப்பயிர்களிலும், கத்தரி, தக்காளி, வெண்டை, முட்டைக்கோசு, சர்க்கரைவள்ளி ஆகிய 5 காய்கறிப் பயிர்களிலும் சுமார் 1232 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.
5.	சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்கள் குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு	மஞ்சள், மிளகாய், மரவள்ளி, கொத்தமல்லி, இஞ்சி, வெங்காயம், உருளைக்கிழங்கு, முந்திரி ஆகிய 8 சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்களில் சுமார் 1294 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப் படுகின்றன.

6.	தென்னை மற்றும் கமுகு குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு	சுமார் **380** கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தென்னை பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடும், சுமார் **76** கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டு கமுகு பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடும் செய்யப்படுகின்றன.
7.	தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்	**2013–14**ஆம் ஆண்டில், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் பொருட்டு **21** பயிர்களின் கீழ் அறிவிக்கை செய்யப்படும் வட்டாரம் / குறுவட்டம் வாரியாக காரிப் பருவத்தில் சுமார் **44,626** பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப் படுகின்றன.
8.	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்	இத் திட்டம், தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. வட்டார / உள்வட்ட அளவில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்துவதற்கு பதிலாக அனைத்து வருவாய் கிராமங்களிலும் பயிர் அறுவடை பரிசோதனைகள் முன்னோடித் திட்டமாக நாமக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களில் **2013–14**ஆம் ஆண்டு காரிப் மற்றும் ராபி பருவங்களில் **12** பயிர்களுக்கு **17,692** பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.
9.	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர்	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர் காப்பீட்டு திட்டம்) **2013–14**ஆம் ஆண்டு ராபி பருவத்தில் **12**

	காப்பீட்டு திட்டம்)	பயிர்களுக்கு 21,090 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள் வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.
10.	மழைப் புள்ளிஇயல்	சுமார் 628 சாதாரன மழைமானி நிலையங்களிலிருந்து மழை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாதம், பருவம், ஆண்டு வாரியாக தொகுக்கப் படுகின்றன.
11.	நீர்ப்பாசன புள்ளிஇயல்	பாசன ஆதாரங்கள் வாரியாக முக்கிய பயிர்களின் பரப்பு, நீர்ப்பாசன வகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன.
12.	வேளாண்மைக் கூலிகளுக்கான குறியீட்டெண் மற்றும் தோட்டத் தொழிலாளர் விவரங்கள்	மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒவ்வொரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் விவசாய தொழில்களுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் மதிப்பிடப்படுகிறது.
13.	விற்பனை மிகுதி திட்டம்	நெல் உற்பத்தியில் வழங்கப்பட்ட கூலி, விதைப் பயன்பாடு, சொந்த உபயோகம் போன்றவை தவிர விற்பனைக்கு ஒதுக்கப்படும் நெல் அளவு குறித்து மதிப்பீடு செய்யப்படுகிறது.
14.	பேரிடர் மேலாண்மை	எதிர்கால கொள்கை முடிவுகளுக்கு பயன்படும் வகையில் மாவட்ட வாரியாக ஏற்படும் இயற்கை பேரிடர் அழிவு மற்றும் மீட்பு தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாநில அளவில் தொகுக்கப்படுகின்றன.
15.	சுற்றுச் சூழல் புள்ளிஇயல்	சுற்றுச் சூழல் தொடர்பான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ‘‘சுற்றுச் சூழல் தொகுப்பாக’’ வெளியிடப் படுகிறது.

சமூகப் புள்ளிஇயல்

16.	தேசிய மாதிரி ஆய்வு	தேசிய மாதிரி ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் மக்களின் சமூக பொருளாதார நிலைமை குறித்து அறிவியல் ரீதியான மாதிரி முறையைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது. நுகர்வோர் செலவின விவர ஆய்வின் முடிவுகள் மக்களின் வாழ்க்கை தரத்தினை அறிய ஒரு கருவியாகவுள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆய்வின் முடிவுகள் மக்களின் பல்வேறு வகையான வேலைவாய்ப்பு தன்மைகளை அறிய உதவுகின்றன. இவ்விவரங்கள் திட்டக் குழுவின் திட்டமிடலுக்கு பயன்படுகின்றன. தற்போது தேசிய மாதிரி ஆய்வு 71–வது சுற்றின் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இந்த சிறப்பு ஆய்வானது மக்களின் சுகாதாரம், நோயுள்ள விவரங்கள், கல்வி போன்றவைகள் குறித்த ஆய்வாகும்.
17.	வீட்டுவசதிப் புள்ளிஇயல்	பொது மற்றும் தனியார் துறைகளில் கட்டுமான விவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.
18.	கட்டுமான செலவு குறித்த குறியீட்டெண்	சில முக்கிய கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் கூலி விவரங்கள் மாநிலத்தின் 16 மாவட்ட மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு காலாண்டு அடிப்படையில் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது.

19.	தேசிய தொழில்நுட்ப மனிதவள தகவல் திட்டம்	பொறியியல், தொழில்நுட்பக் கல்வி, மேலாண்மை, மருந்தியல் மற்றும் சமையல்கலைக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் பட்டம் பெற்றோர் ஆகிய விவரங்கள் குறித்து ஆண்டறிக்கை வெளியிடப்படுகிறது.

தொழில் புள்ளி விவரங்கள்

20.	ஆண்டுத் தொழில் ஆய்வு	மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)ன் கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் மதிப்புக் கூடுதல், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்து ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது, 13வது நிதிக் குழுவின் மானியத்தின் மூலம் 2012–13வது ஆண்டிற்கான ஆண்டு தொழில் ஆய்வு, தமிழ் நாடு மாநிலத்தில் உள்ள அனைத்து பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் முழுமையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.
21.	தொழிற் உற்பத்திக் குறியீட்டெண்	தொழிற் உற்பத்திக் குறியீட்டெண் கனிமம், உற்பத்தி மற்றும் மின்சாரம் உள்ளடக்கி மூன்று தொழில் துறையிலிருந்து ஒவ்வொரு மாதமும் உற்பத்தி விவரம் பெறப்படுகிறது. கனிமம் தொகுப்பில் 14 வகையான விவரங்களும், 368 இனங்களில் உற்பத்தி தொகுப்பில் 1373 தொழிற் கூடங்களும் மற்றும் மின்சாரத்

		தொகுப்பில் ஒன்றுக்கும், அவை உற்பத்தி விவரங்கள் மாதந்தோறும் சேகரிக்கப்படுகிறது.
22.	கைத்தறிப் புள்ளி விவரம்	கைத்தறி பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் காலாண்டுதோறும் சேகரிக்கப்பட்டு மற்றும் நெசவாளர்களின் பொருளாதார நிலை குறித்த விவரங்கள் ஒவ்வொரு ஆண்டும் தொகுக்கப்படுகிறது. சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் அமைந்துள்ள 195 குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில வருவாய் புள்ளி விவரங்கள்

23.	மாநில வருவாய் மற்றும் மாவட்ட வருவாய் மதிப்பீடு	பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட் பிரிவுகளின் கீழ் மொத்த/நிகர மாநில வருவாய் மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை கணிக்கப்படுகின்றன. மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் கணிக்கப் படுகின்றன.
24.	மாநிலக் கணக்குகள்	அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவரங்களும், 1,049 உள்ளாட்சி அமைப்பின் விவரங்களும் சேகரித்து தொகுக்கப்படுகின்றன.
25.	மூலதன ஆக்கம்	மாநில பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணிக்கப்படுகின்றன.

விலைவாசிப் புள்ளி விவரங்கள்

26.	அங்காடிப் புலனாய்வுத் திட்டம் மற்றும் விலைகள்	மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண்மைப் பொருட்களின் விலைகள், வரத்து, இருப்பு, அனுப்புகை போன்ற அங்காடி நிலவரப் போக்கு ஆகிய விவரங்கள் சேகரிக்கப் படுகின்றன.
27.	மொத்த விலைக் குறியீட்டெண்	வேளாண்மை மற்றும் தொழில் சார்ந்த பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரித்து ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் கணிக்கப் படுகின்றது.
28.	நுகர்வோர் விலைக் குறியீட்டெண்	நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்க 6 மையங்களுக்கான விலைவாசிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு சிம்லா தொழிலாளர் அமைப்பகத்திற்கு அளிக்கப் படுகின்றன. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலமாக மாதந்தோறும் கடலூர் மற்றும் நாகர்கோயில் மையத்திற்கு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்கப் படுகின்றன.

இதர இனம்

29.	வெளியீடுகள்	இத்துறையிலிருந்து முக்கியமாக தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் மற்றும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்ட புள்ளிஇயல் கையேடு மற்றும் வட்டாரப் புள்ளிஇயல் கையேடு முதலிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன.

3.2.4 மாநில புள்ளிஇயல் குழு

புள்ளிஇயலின் இன்றியமையாத் தன்மையை உணர்ந்து, அரசு மாநில புள்ளிஇயல் குழுவினை அரசு ஆணை (நிலை) எண்.13, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (எஸ்.டி.2 & இ) துறை, நாள் 03.03.2008 மூலம், புள்ளிஇயல்அமைப்பு செவ்வனே செயல்படவும், பிற துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தவும், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் சிறப்பு அம்சமாகக் கொண்டு புள்ளி விவரங்களை உருவாக்கும் அரசுத் துறைகளை நெறிமுறைப்படுத்தவும், முறையாக புள்ளி விவரங்களை சேகரிக்கவும், செயல்படுத்தவும், சேகரித்து வைக்கவும், மீளப்பெறவும், வெளிப்படுத்தவும், அரசுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் உதவும் வகையில் இக்குழு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

3.2.5 2014–2015ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

பகுதி–2 திட்டத்தின் கீழ் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைக்கு 2014–15 ஆம் ஆண்டிற்கு முன்மொழியப்பட்ட மொத்த தொகை 32.00 இலட்சம் ரூபாய். இவைகளில், மாநாடுகள், கருத்தரங்குகள், ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதற்காக 2.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்று மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திலும் மற்றும் ஒரு மாவட்ட துணை இயக்குநர் அலுவலத்திலும் தனிநபர் தடுப்பறை (Cubicle/partition) ஏற்படுத்துவதற்காக 15.00 இலட்சம் ரூபாய் புதியதாக ஏழு கணினிகள் மற்றும் ஒரு நகல் மற்றும் அச்சுப் பிரதிகள் எடுக்கும் இயந்திரம் வாங்க 4.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சி

வகுப்புகள், கருத்தரங்குகள், மாநாடுகள், கூட்டங்கள் நடத்துவதற்காகவும் சம்பந்தப்பட்ட பொருள் சார்ந்த வல்லுநர்களை அழைத்து நவீன உத்திகளை கையாளுவதற்காகவும் **10.00** இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

நாட்டில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து நிறைவேற்றி வருகின்றன. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை நுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு கொள்கைகள் வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசுக்கு உதவி வருகிறது.

3.3.1 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்

(iii) வருடாந்திர வெளியீடான ‘தமிழ்நாடு – பொருளாதார ஆய்வறிக்கை’ ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

3.3.2 தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்கள் இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாசனபரப்பு மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மை திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.3.3 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

i. திட்ட வடிவமைப்பு
ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்
iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்
iv. திட்ட நோக்க நிறைவேற்றம்
v. திட்டப்பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வதுடன் செலவழிக்கப்படும் தொகைக்கு உரிய மதிப்பிலான பயன்கள் ஏற்பட்டனவா என்று ஆய்தல்

ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளும், ஆலோசனைகளும் திட்டத்தைச் செயல்படுத்துபவர்கள் திட்டத்தை முறைப்படுத்தி நன்கு செயல்படுத்த உதவுகின்றன.

3.3.4. இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மார்ச்–2014 ஆம் ஆண்டு வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த **724** மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மதிப்பீட்டாய்வுகள் சமூகநலம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, வனம், கல்வி, வீட்டுவசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து மற்றும் ஊரக வளர்ச்சி உள்பட பல்வேறு துறைகளின் திட்டங்களைச் சார்ந்ததாகும்.

3.3.5. 2014–15 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டம்:

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் தரமான தன்னிச்சையான நிறுவனங்களை நியமித்து மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு 57.00 இலட்சம் ரூபாய் பகுதி-II திட்டத்தின் கீழ் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

1. இத்துறைக்கு மடிக்கணினி, கலர் ஜெராக்ஸ், பிரிண்டர் மற்றும் துணைப்பொருட்கள் வாங்குதல்;
2. ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம் வாங்குதல்;
3. இத்துறையின் தொழில் நுட்பப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு மாநில / தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளித்தல்;
4. மதிப்பீட்டாய்வுகளை தரமான / தன்னிச்சையான நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளல்.

3.3.6 2014–15 ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள்:

2014–15 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 33 ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்குத்

தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாசனப்பரப்பு வளர்ச்சித் திட்டம், பல்வேறு துறை சார்ந்த முக்கிய திட்டங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, தமிழ்நாடு – பொருளாதார ஆய்வறிக்கை தயாரித்து வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.4 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் **29.4.2003** நாளிட்ட அரசாணை (நிலை) எண்.**31** இல் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களுக்காக ஒரு பிரிவு ஏற்படுத்தலாம் என அரசு முடிவு செய்தது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கிய நோக்கம் வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகும். சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்கு ஏராளமான திட்டங்கள் கண்டறியப்பட்டன.

அதன் பின்னர் “சிறப்பு முயற்சிகள்” என்ற பொருண்மை அரசு அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் ஒருங்கியல் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன. இந்த அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் “சிறப்பு முயற்சி” திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3.4.1 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் அதிகரித்துவருவதால், போக்குவரத்து கட்டமைப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்த தேவையைப் பூர்த்தி செய்வதன் முதற்கட்டமாக, ஒரு புதிய துரித இரயில் போக்குவரத்துத் தேவையின் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்களுடனும், மேலும் எதிர்காலத்தில் மோனோ இரயில் உள்ளிட்ட கூடுதல் இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

டில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் (சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தற்போதைய முதன்மை ஆலோசகர்) தயார்செய்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் இரண்டு வழித்தடங்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23.1 கி.மீ நீளத்திலும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை 22.0 கி.மீ நீளத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த வழித்தடங்களில்

கீழ்காணும் நிறுத்த நிலையங்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வழித்தடம்–1: வண்ணாரப்பேட்டை – மண்ணடி – உயர்நீதி மன்றம் – **சென்னை சென்ட்ரல்** – அரசினர் தோட்டம் – எல்.ஐ.சி. – ஆயிரம் விளக்கு – ஏ.ஜி–டி.எம்.எஸ் – தேனாம்பேட்டை – நந்தனம் – சைதாப்பேட்டை – சின்னமலை – கிண்டி – **ஆலந்தூர்** – நங்கநல்லூர் சாலை – மீனம்பாக்கம் – சென்னை விமானநிலையம் ; மற்றும்

வழித்தடம்–2: **சென்னை சென்ட்ரல்** – எழும்பூர் – நேரு பூங்கா – கீழ்ப்பாக்கம் – பச்சையப்பன் கல்லூரி – செனாய்நகர் – அண்ணாநகர் கிழக்கு – அண்ணாநகர் கோபுரம் – திருமங்கலம் – கோயம்பேடு – புறநகர் பேருந்து நிலையம் – அரும்பாக்கம் – வடபழனி – அசோக் நகர் – ஈக்காட்டுதாங்கல் – **ஆலந்தூர்** – பரங்கிமலை.

மேற்கண்டுள்ள இரண்டு வழித்தடங்களும் சென்னை சென்ட்ரல் மற்றும் ஆலந்தூரில் ஒன்றாக இணையும். வழித்தடம்–1 இல் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலுள்ள பகுதி மற்றும் வழித்தடம்–2 இல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலுள்ள பகுதி நிலத்திற்கடியிலும் எஞ்சியுள்ள பகுதிகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் செயல்படுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை

அளவிலான ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் உள்நாடு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து **14,600** கோடி ரூபாய் செலவில் கட்டிமுடிப்பதற்கு மத்திய அரசு தனது நிர்வாக ஒப்புதலை பிப்ரவரி **2009** இல் வழங்கியுள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறப்புவகை நிறுவனத்தை (Special Purpose Vehicle) ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் **15** சதவிகிதத்தை பங்கு மூலதனமாகவும், **5** சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. அதே போன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் **15** சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், **5.78** சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள **59.22** சதவிகிதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) மத்திய அரசு இதுபோன்ற வெளிநாட்டு கடனுதவி பெறுவதற்கு வெளியிட்டுள்ள வரைமுறைகளுக்கிணங்க கடனாகப் பெறப்படும்.

தமிழ்நாடு அரசு ‘சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்’ என்ற நிறுவனம் **3.12.2007** அன்று கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஏற்கனவே நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளை வெளிக்காட்டும் வகையில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக **4.6.2009** அன்று மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் செயலாளரையும்

சேர்த்து 5 இயக்குநர்களை மத்திய அரசும், மேலாண்மை இயக்குநரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மாநில அரசும் நியமித்துள்ளன.

தமிழ்நாடு அரசு 2216.74 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் 844 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 31.3.2014 வரை 1923.79 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 287.45 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் 4324.53 கோடி ரூபாயை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனை நிறுவனத்திற்கு அனுப்பும் உதவியாகவும் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்கள் அரசாணைகள் மூலம் பெறப்படுகின்றன. மத்திய அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நேரடியாகப் பெற்றுள்ளது. தனியார் நிலங்களைப் பொறுத்தவரையில், நிலக் கையெடுப்புச் சட்டம் 1894–ன் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான கட்டுமானம் மற்றும் அமைப்பு சார்ந்த ஒப்பந்தங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 80 சதவிகிதமும், கோயம்பேட்டில் உள்ள பணிமனை கட்டுமானங்கள் 80 சதவிகிதமும், நிலத்தடி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதைகளின் கட்டுமானப் பணிகள் 50 சதவிகிதமும் 31.3.2014 வரை முடிவுற்றுள்ளன. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலை பன்முக போக்குவரத்துகளான பேருந்து, புறநகர் இரயில், பெருந்திரள் இரயில் மற்றும்

மோனோ இரயிலுடன் ஒருங்கிணைப்பதை உறுதிசெய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொன்றிற்கு சிரமமேதுமின்றி மாறிச் செல்ல வசதியாக இருக்கும்.

3.4.2 கட்டம்–I இன் நீட்டிப்பு மற்றும் கட்டம்–II வழித்தடங்கள்:

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம்–1ன் தற்போதய வடக்குமுனை நிலையமான வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் மற்றும் விம்கோ நகர் வரை நீட்டிப்பதற்கான **3253** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டக் கருத்துருவிற்கு விரைவில் ஒப்புதல் வழங்குமாறு இந்த அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கூடுதலாக **76** கி.மீ. நீளத்திலான புதிதாக கண்டறியப்பட்ட மூன்று வழித்தடங்களை செயல்படுத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உத்தேசித்துள்ளது. விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

ஓ.பன்னீர்செல்வம்
நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்